11. பண்டைய இலங்கையில் வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணிய மன்னர்களின் பெயர்கள் நிரல் “அ” விலும் அவர்கள் மேற்கொண்ட தொடர்புகள் நிரல் “ஆ” விலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக இணைப்பதனால் கிடைக்கும் விடையாவது.

| (அ) | | (ஆ) | |
|---|---|---|---|
| 1. | முதலாம் விஜயபாகு | A. | பத்தினித்தெய் கோயில் திறப்பு விழாவிற்காக இந்தியாவின் சேர நாடு செல்லல் |
| 2. | முதலாம் கஜபாகு | B. | எகிப்து நாட்டுடன் வர்த்தக தொடர்புகைளை மேற்கொள்ளல் |
| 3. | தேவநம்பியதீசன் | C. | பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்தல் |
| 4. | முதலாம் புவனேகபாகு | D. | திரிலோகசுந்தரி என்னும் கலிங்க நாட்டு இளவரசியைத் திருமணம் செய்தல் |
| | | E. | அரிட்டன் மூலமாக அசோகனுக்கு பரிசுப் பொருட்களை அனுப்புதல் |

1) CDEB 2) ACDE 3) DABE 4) DAEB

12. பொதுமக்களுக்குத் தேவையான சேவையை வழங்கி மக்களின் நம்பிக்கையினைப் பெற்றுக் கொண்டதாக வரலாற்றில் கூறப்படும் அந்நிய இன மன்னர்கள்,

1) எல்லாளன், நிசங்கமல்லன் 2) நிசங்கமல்லன், கலிங்கமாகன்
3) எல்லாளன், ஸ்ரீமாறஸ்ரீபல்லபன் 4)1ம் இராஜஇராஜசோழன், 1ம் இராஜேந்திரசோழன்

13 ருவன்வெலிசாய தாதுகோப அமைப்போடு **தொடர்புபடாத** கூற்றாக அமைவது

1) “வஜ்ரசும்பட்ட” என்னும் கருவி பொருத்தப்பட்டிருத்தல்
2) கட்டடத்தின் அடித்தளம் 10.5 அடி ஆழமாக்கப்பட்டிருத்தல்
3) கட்டடத்தின் நீள அகலத்திற்கேற்ப மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல்
4) “நவநீதம்” என்னும் களிமண் பூசப்பட்டிருத்தல்

14. புராதன காலத்தில் மன்னர்களால் அறவிடப்பட்ட “மாத்ரிக்க மத்சய பாகய” என்னும் வரியோடு தொடர்புடைய விடயம்,

1) குளங்களில் மீன்பிடித்தலுக்காக அறவிடப்பட்ட வரியாகும்.
2) குளங்களில் இருந்து நீரைப் பெற்றுக்கொண்டவர்களிடம் அறவிடப்பட்ட வரியாகும்.
3) குளங்களை பராமரிப்பதற்காக அறவிடப்பட்ட வரியாகும்.
4) குளங்களில் இருந்து வயலை நோக்கி வரும் சிறு வாய்க்காலில் மீன்பிடித்தலுக்காக அறவிடப்பட்ட வரியாகும்.

15. புராதன கால மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட பசுக்களின் பாதுகாப்பின் பொருட்டு சாந்தி பூசை செய்யும் பழக்கம் தற்போதும் பின்பற்றப்படும் மாகாணங்கள் முறையே

1) சப்பரகமுவ, வடமத்திய 2) சப்பிரகமுவ, ஊவா
3) ஊவா, வடமத்திய 4) வடமத்திய, மத்திய


kalvi.lk

16. புராதன காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் “அ” நிரலிலும் அவற்றில் இடம்பெறும் தகவல்கள் நிரல் “ஆ” பகுதியிலும் தரப்பட்டுள்ளன. இவற்றைப் பொருத்தினால் வரும் சரியான விடை.

| அ | ஆ |
|---|---|
| 1. தம்பியா அட்டுவா கெட்டபத | A. பிள்ளைகளுக்கு கல்வியறிவை வழங்குவது பெற்றோர்களின் கடமையாகும் |
| 2. சத்தர்மரத்னாவலிய | B. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் மதுபாச்சிகா என அழைக்கப்படல் |
| 3. சகஸ்ஸ வத்துப்பகரண | C. எனது மகளுக்கு தயிர் உண்பதற்கு ஒரு சோடி மாடு தேவைப்படுமே என தந்தை ஒருவர் கூறுதல் |
| 4. சத்தர்மலங்கார | D. சாலியகுமாரனின் மனைவியான அசோகமாலா சுவையான உணவு சமைத்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றமை |
| | E செல்வந்தர்கள் விரும்பி உண்ணும் உணவு பற்றிக் குறிப்பிடுதல் |

1) BEAD 2) BCDA 3) DCEB 4) BDCA

7. புராதன காலத்தில் பல்வேறு மன்னர்கள் பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளனர். அவர்களுள் நிசங்கமல்லன், 4ஆம் மகிந்தன், ஆமண்டகாமினி அபய போன்ற மன்னர்களோடு தொடர்புடைய சட்டங்களாக அமைபவை,

1) சூழல் பாதுகாப்புச் சட்டங்கள்
2) வரி அறவீட்டுச் சட்டங்கள்
3) விவசாய ஒழுங்கமைப்புச் சட்டங்கள்
4) உயிரினப் பாதுகாப்புச் சட்டங்கள்

18. பின்வருவனவற்றுள் கம்பளை இராசதானியுடன் தொடர்புடைய விடயமாகக் **கருத முடியாதது,**

1) தாய் வழி அரசுரிமை முறை பின்பற்றப்படுதல்
2) அரச குடும்பத்துடன் நெருங்கிய இரு பிரபுத்துவக் குடும்பங்கள் காணப்படல்
3) மார்க்கோபோலோ என்னும் இஸ்லாமிய தேசசஞ்சாரியின் வருகை இடம்பெறல்
4) சீனத் தளபதியினால் வீர அழகேஸ்வரன் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படல்

19. புராதன காலத்தில் மிகை உற்பத்திக்குச் சொந்தக்காரர்கள் வாழ்ந்தனர் என்பதனை வெளிப்படுத்தும் இலக்கிய மூலாதாரமாக அமைவது,

1) ஜாதக அட்டகதா
2) தம்பியா அட்டுவா கெட்டபதய .
3) உத்தர விஹார அட்டகதா
4) சிஹல அட்டகதா

20. தம்மிடம் சரணடைந்திருந்த குசுமாசனதேவியை கண்டியின் அரசியாக்க போர்த்துக்கேயர் மேற்கொண்ட படையெடுப்பினை எதிர்கொண்ட கண்டியின் ஆட்சியாளன்

1) செனரத்
2) 1ஆம் விமலதர்மசூரியன்
3) 2ஆம் இராஜசிங்கன்
4) 2ஆம் விமலதர்மசூரியன்

21. 2ஆம் விமலதர்மசூரியன், விஜய இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆகிய கண்டி மன்னர்களுக்கு ஒல்லாந்தர் வழங்கிய உதவியாக அமைவது,

1) மணப்பெண்களை அழைத்துவர கப்பல்கள் வழங்குதல்
2) மன்னர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு கப்பல்களை வழங்குதல்
3) வெளிநாட்டு வர்த்தகத்திற்காக கப்பல்களை வழங்குதல்
4) உபசம்பதா சடங்கிற்காக பௌத்த பிக்குகளை வரவழைக்க கப்பல்களை வழங்குதல்


kalvi.lk

22. மாயாதுன்னையால் உருவாக்கப்பட்ட சீதாவாக்கை இராச்சியம் குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைந்தமையோடு **தொடர்புபடாத** காரணியாக அமைவது,

1) போர்த்துக்கேயருக்கு எதிராக அடிக்கடி போரில் ஈடுபடல்
2) இவனது மகனான 1ஆம் இராஜசிங்கன் பௌத்த எதிர்ப்புக் கொள்கையை பின்பற்றல்
3) தனக்கு உதவிய கோணப்பு பண்டாரவை 1ஆம் இராஜசிங்கன் கொலை செய்தல்
4) அரசுரிமை கோர பொருத்தமான உரிமையாளன் இல்லாது போதல்

23. கி.பி 1638, கி.பி 1766 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற ஒப்பந்தங்கள் பற்றிய சரியான கூற்றாக அமைவது,

1) கண்டி இராச்சிய மன்னர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய ஒப்பந்தங்களாகும்.
2) போர்த்துக்கேயருக்கும் கண்டி மன்னர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்காளகும்.
3) கண்டி இராச்சியத்தின் உரிமையை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களாகும்
4) கண்டி இராச்சிய மன்னர்கள் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த மேற்கொண்ட ஒப்பந்தங்காளகும்.

24 கண்டி இராச்சியம் பிரித்தானியருக்கு அடிமைப்பட்டமையை உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம்,

1) கண்டிப் பிரகடனம் 2) கண்டி ஒப்பந்தம் 3) கண்டி அறிக்கை 4) கண்டிப் பிரசுரம்

25. பொதுமக்கள் மத்தியில் இருந்து தோன்றிய தலைவர்களால் பிரித்தானியருக்கு எதிராக மேற் கொண்ட போராட்டமாகக் கருதப்படுவது,

1) கி.பி 1848ஆம் இரண்டாவது சுதந்திரப் போராட்டம்
2) கி.பி 1833ஆம் ஆண்டு கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்திற்கு எதிரான போராட்டம்
3) கி.பி 1818ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டம்
4) கி.பி 1797ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களில் இடம்பெற்ற போராட்டம்

26. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தேசிய சமய மறுமலர்ச்சிக் காலத்தில் பராபவ என்னும் சிங்கள நாடகத்தின் மூலம் மதுபாவனையால் ஏற்படும் தீமைகளை வெளிக்காட்டியவர்

1) பியதாஸ சிரிசேன
2) வலிசிங்க ஹரிச்சந்திர
3) ஜோன் த சில்வா
4) அநகாரிக தர்மபால

27. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை முற்றாக நீக்கிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம்,

1) டொனமூர் சீத்திருத்தம்
2) மனிங் - டெவன்சியர் சீர்திருத்தம்
3) மனிங் சீர்திருத்தம்
4) குறூ - மக்கலம் சீர்திருத்தம்

28. இலங்கையர்களால் இலங்கை தேசிய சங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டமை வரலாற்றின் முக்கிய ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுவதற்கான காரணம்,

1) பிரித்தானியருக்கு எதிராக தொடர் போராட்டங்களை மேற்கொண்டு சுதந்திரத்தை பெற்றுத்தந்தமையால்.
2) சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்கியதால்.
3) படித்த இலங்கையர்கள் இந்த அமைப்பில் உறுப்பினர்களாகச் செயற்பட்டதனால்.
4) சாதாரண மக்களையும் இதில் இணைத்துக் கொண்டு போராட்டங்களை மேற்கொண்ட மையால்.

29 கோல்புறூக் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அரசின் ஏகபோக உரிமையாகக் காணப்பட்ட வர்த்தகப் பொருட்களாவன,

1) உப்பு, யானைத் தந்தம்
2) கறுவா, மாணிக்கம்
3) கறுவா, உப்பு
4) யானைத் தந்தம், மாணிக்கம்



kalvi.lk

